# மெட்ரோ ரயில் நிறுவனத்தில் குடியரசு தின விழா

சென்னை, ஜன. 26: சென்னை மெட்ரோ ரயில் நிறுவனத்தின் சார்பில், 71-ஆவது குடியரசு தினம் கோயம்பேட்டில் உள்ள தலைமை அலுவலகத்தில் ஞாயிற்றுக்கிழமை கொண்டாடப்பட்டது.

இதில், மெட்ரோ ரயில் நிறுவனத்தின் மேலாண்மை இயக்குநர் பங்கஜ்குமார் பன்சல் சிறப்பு விருந்தினராக பங்கேற்று, தேசிய கொடியை ஏற்றி, அணிவகுப்பு மரியாதையை ஏற்றுக்கொண்டார்.

குடியரசு தின விழாவின் ஒருபகுதியாக, சக ஊழியர்களிடையே விளையாட்டுத் திறனை ஊக்குவிப்பதற்காக அலுவலர்கள் மற்றும் பணியாளர்களுக்கு விளையாட்டுப் போட்டி நடைபெற்றது. இதில், 3 வெளிப்புற விளையாட்டுப் போட்டிகள்(சுறுசுறுப்பான நடை, பின்னோக்கி நடை, மெதுவாக மிதிவண்டி போட்டி), மற்றும் 3 உள் விளையாட்டுப்போட்டிகள் (இறகு பந்து, டேபிள் டென்னிஸ், கேரம்) ஆகிய இரு வெவ்வேறு பிரிவுகளில் போட்டிகள் நடத்தப்பட்டன. இதில், ஆண்கள், பெண்கள் கலந்து கொண்டனர். போட்டிகள் முடிவில், 57 அலுவலர்கள், பணியாளர்களுக்கு நிறுவனத்தின் மேலாண்மை இயக்குநர் பங்கஜ்குமார் பன்சல் பரிசுகளை வழங்கினார். மேலும், சென்னை ரன்னர்ஸ் மாரத்தானில் வெற்றிபெற்ற 18 பேருக்கு பரிசு வழங்கப்பட்டது.

இந்நிகழ்ச்சியில் சென்னை மெட்ரோ ரயில் நிறுவனத்தின் இயக்குநர்கள் சுஜாதா ஜெயராஜ் (நிதி), எல்.நரசிம் பிரசாத் (இயக்கம் மற்றும் அமைப்புகள்) உள்பட பலர் பங்கேற்றனர்.